**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.**
**C.C. No.391/2022 P.W.7**

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ராஜேஸ்வரி | க–பெ | கண்ணன் |
| ஊர்: | : | கோயம்புத்தூர் | | |
| வயது: | : | 41/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | காவல் ஆய்வாளர் | மாவட்டம் | கோயம்புத்தூர் |

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.03.2026**

**எதிரி ஆஜர். சாட்சி கோயம்புத்தூர் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் உள்ள காணொலி காட்சி அறையில் இருந்து சாட்சியம் அளித்தார்.**

-------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் கோயம்புத்தூரில் வசித்து காவல் ஆய்வாளராக பணி செய்து வருகிறேன். காவல் ஆய்வாளராக பன்னாட்டு விமான நிலைய குடி வரவு பணியகத்தல் பணி செய்து வருகிறேன். இதற்கு முன்பு காரைக்குடி அனைத்து மகளிர் காவல் நிலையத்தல் சார்பு ஆய்வாளராக 2016 ம் வருடம் பணியில் இருந்த போது 13.01.2016 அன்று நிலைய பணியில் இருந்த போது 11.00 மணிக்கு கவிப்பிரியா என்பவர் நிலையம் ஆஜர் ஆகி கொடுத்த புகார் மனுவை பெற்று நிலைய குற்ற எண். 2/2016 இதச பிரிவுகள் 355, 294(b), 323, 506(i), r/w Section 4 of TNPHW Act ன் கீழ் வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4. பின்னர் இவ்வழக்கின்** பட்டியல் சாட்சிகள் 1 முதல் 4 வரையிலானவர்களை விசாரணை செய்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் இந்த வழக்கின் சம்பவயிடம் சென்று 13.01.2016 அன்று 12.00 மணிக்கு சம்பவயிட சாட்சிகள் ரமேஷ் மற்றும் மூக்காயி ஆகியோர்கள் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகஜர் தயார் செய்தேன். **மாதிரி வரைபடம் அ.சா.ஆ.5**. பின்னர் இந்த வழக்கின் எதிரியை தேடி சென்ற நிலையில் 15.01.2016 அன்று 19.00 மணிக்கு புதுவயல் பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்தவரை வழக்கின் காரணம் கூறி கைது செய்து தக்க வழிக்காவல் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். பின்னர் இந்த வழக்கில் காயம்பட்ட கவிப்பிரியா என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் திரு.சித்தார்த், அரசு மருத்துவமனை காரைக்குடி என்பவரை விசாரணை செய்து அவரிடம் இருந்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காய சான்றிதழ் பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். விபத்து பதிவேட்டில் மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயமானது சாதாரன வகையை சேர்ந்தது என்று மருத்துவர் கருத்துரை வழங்கியிருந்தார். பின்னர் பட்டியல்

சாட்சிகள் 1 முதல் 8 வரையிலானவர்களை விசாரணை செய்ததில் எதிரி மீது குற்ற முகாந்திரம் இருந்த காரணத்தால் 18.01.2016 அன்று மேற்சொன்ன பிரிவுகளின் அடிப்படையில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**

சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதி என்ன என்றால் 12.01.2016 அன்று ஆகும். காவல் நிலையத்தில் புகார் கொடுத்தாக சொல்லும் தேதி என்ன என்றால் 13.01.2016 ஆகும். சம்பவம் நடந்ததாக சொல்லும் தேதிக்கும் புகாருக்கும் காலதாமதம் ஒரு நாள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததகா சொல்லம் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வள துாரம் இருக்கும் என்றால் சுமார் 5 கி.மீ இருக்கும். சம்பம் நடந்ததாக சொல்லும் இடத்திற்கும் காவல் நிலையத்திற்கும் எத்தனை மணி நேரத்தில் வரலாம் என்றால் வருவபர்களின் தன்மை பொருத்தது. காலதாமதத்திற்கான காரணம் எதுவும் எனது விசாரணையில் குறிப்பிடவில்லை என்றால் புகாரிலேயே காலதாமதிற்கான காரணம் உள்ளது. சாட்சிகள் அனைவரும் புகார்தாரின் உறவினர்கள் என்றால் உறவினர்களாக இருக்கலாம். எதிரிக்கும் புகார்தாரருக்கும் இடையே தேவக்கோட்டை சார்பு நீதிமன்றத்தல் புகார் கொடுத்து வழக்கு நடந்த விவரம் பற்றி விசாரணையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. விவாகரத்து வழக்கு பற்றி வாதி எதுவும் என்னிடம் எதுவும் குறிப்பிடவில்லை. மாதிரி வரைபடம், பார்வை மகஜர் ஆகியவை காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. புகார்தாருக்கு எற்பட்ட காயம் அவர்களாக ஏற்படுத்தி கொண்ட காயம் என்றால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகாரின் அடிப்படையில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. புகார்தாரர் குறிப்பிட்டுள்ளபடி சொன்ன நேரத்தில் சொன்ன இடத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றால்சரியல்ல. இந்த வழக்கிற்கும் எதிரிக்கும் எந்தவித சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கு எதிரியை பழிவாங்கும் நோக்கத்துடன் புகார் கொடுக்கப்பட்டது என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.03.10 17:42:30 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.